[1972 மார்ச் 3

திரு. கே. டி. கே. தங்கமணி : வைணவ மதக் கோயில்களைப் பொறுத்தவரை இராமானுஜர் இயற்றிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் வடக்கே கூட பிரபலமாக இருக்கிறது. ஆகவே, வைணவக் கோயில்களில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தந் தான் அருச்சனைக்குப் பயன்படுத்தப்படும். மற்ற மொழிகளுக்கு இடம் இல்லை என்ற வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தந்தான் வைணவக் கோயில்களில் வழிபாட்டு முறைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

பிரகதீஸ்வரர் கோயிலைச் சேர்ந்த நிலங்கள்

* 295 வினா திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுக்கு தற்போது சொந்தமான நஞ்சை புஞ்சை நிலங்கள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

நஞ்சை நிலங்கள்—ஏக்கர் 42.05 சென்ட்.
புஞ்சை நிலங்கள்—ஏக்கர் 118.80 சென்ட்.

திரு. என். கிட்டப்பா : கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் காணப்படும் தகவல்படி தஞ்சைப் பெரிய கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை இப்போது யார் யார் வைத்திருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து அவற்றை மீட்க தனிக் குழு ஒன்றை அமைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கிடைத்திருக்கும் ஆதாரங்களை எல்லாம் வைத்துத்தான் இந்த நிலங்கள் எல்லாம் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் என்று நிர்ணயித்திருக்கிறோம். கல்வெட்டுகளின்படி பார்த்தால் இலங்கை அரசர்கள் விளக்கேற்றி வைக்க, விளக்குக்கு எண்ணெய் தரவேண்டும் என்றெல்லாம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, இந்தக் கல்வெட்டுக்களை வைத்துச் சொத்துக்களை மீட்பது என்பது தற்போது இயலாத காரியம்.

1972 மார்ச் 3]

திரு. எஸ். வடிவேல் : தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறது? எவ்வளவு காணுமல் போய் விட்டது? அப்படிக் காணுமல் போய்விட்ட நிலங்கள் கிடைத்து விட்டதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏற்கெனவே இருக்கின்ற நிலங்களின் அளவு பற்றிச் சொன்னேன். நஞ்சை 42 ஏக்கர் 5 சென்ட்; புஞ்சை 118 ஏக்கர் 80 சென்ட்.

திரு. கோவை செழியன் : தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் தமிழக அரசின் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறதா அல்லது மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? ராஜராஜ சோழன் சிலை வைக்கின்ற விஷயம் என்ன வாயிற்று?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாநில சுயாட்சிக்கு இறைவனும் அருள் புரிய வேண்டும்.

அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்

* 281 வினு.—திரு. கே. என் குமாரசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரிசனங்களுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் வீடுகள் கட்ட, பணம் வழங்கும் திட்டம் தற்போது செயல்படுகிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியாவாணிமுத்து : தற்போது இல்லை. இக் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : கூட்டுறவு முறையில் வீடுகள் கட்ட பணம் வழங்கும் திட்டம் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டு பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அரிசன மக்கள் இந்தத் திட்டம் எப்போது வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறுர்கள். இதிலே அரசு சீக்கிரமாக முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இன்னும் சில மாதங்களில் முடிவு எடுத்து அறிவிக்கப்படும்.